அதனைத்தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொது மக்கள் இத்திட்டம் குறித்த தங்களது கருத்தினை வாய்மொழியாகவோ எழுத்து பூர்வமாகவோ அளிக்கலாம் எனவும் திட்டம் குறித்த கருத்தினை கூற விரும்புகிறவர்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை விவரமாக தெரிவித்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து, வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு,

<u>திரு.தனசேகரன், வழக்கறிஞர், இருக்கன்துறை :-</u>

திரு.தனசேகரன் அவர்கள் பேசுகையில் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டமானது ஒரு கண்துடைப்பு நாடகம் எனவும்,இந்த கருத்துக்கேட்பு கூட்டமானது குவாரி அனுமதி பெறுவதற்கான ஒரு நடைமுறை எனவும், இருக்கன்துறை கிராமத்தில் 15 வருடங்களாக 20-க்கும் மேற்பட்ட கல்குவாரிகள் மற்றும் கல்உடைக்கும் நிறுவனங்கள் இயங்கி வருகிறது எனவும் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் இதுவரை நடத்தப்பட்ட பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் குவாரிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட நிலையில் இதுவரை எந்த குவாரிகளுக்கும் அனுமதி மறுக்கப்படவில்லை எனவும், அனைத்து குவாரிகளுக்கும் அனுமதி வழங்கியுள்ளனர் என தெரிவித்தார். தற்போது இயங்கி வரும் 20 குவாரிகளுக்கு அனுமதி வழங்கிய பின் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நீர் மற்றும் காற்று மாசு அளவீடு குறித்து ஆய்வு ஏதும் மேற்கொள்ளவில்லை, குவாரிகளில் பயன்படுத்தபடும் வாகனங்களில் இருந்து வெளிவரும் கார்பன் மோனாக்சைடு வாயு குறித்து இப்பகுதிகளில் காற்று மாசு அளவீடு செய்யப்பட்டுள்ளதா என கேள்வி எழுப்பினார். முதல்வரின் முகவரியில் புகார் அளித்த போது இருக்கன்துறை கிராமத்தில் காற்று மாசு நிர்ணயம் செய்ய அளவில் உள்ளதா என்று கேட்டபோது, குவாரிகளில் காற்று மாசு விதிகளை பின்பற்ற அனைத்து குவாரிகளுக்கும் அறிவுரைகள் வழங்கியுள்ளதாக மாசு கட்டுப்பாடு வாரியத்தில் பதில் கடிதம் அளித்தனர். ஆனால் கிராமத்தில் நேரில் வந்து ஆய்வு மேற்கொள்ளவில்லை என கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், குவாரிகளால் என்ன இலாபம் என்று கேள்வி எழுப்பினால் ஊராட்சிக்கு கனிம நிதி வழங்குவதாக கூறுகின்றனர். கனிம நிதியானது சாலை சீரமைப்புகளுக்கு பயன்படுத்தப்படும். ஆனால் சாலைகளை சேதப்படுத்துவதே குவாரிகளில் பயன்படுத்தும் கனரக வாகனங்கள் தான் எனவும், கனிம நிதி வழங்குவதால் எந்த வித பயன்களும் இல்லை எனவும் தெரிவித்தார்.

இதுவரை இயங்கி வரும் குவாரிகள் மற்றும் கிரஷர்களில் காற்று மாசு அளவீடு குறித்து ஆய்வு செய்தபின் குவாரிக்கு அனுமதி அளிக்க வேண்டும். இப்பகுதி மக்கள் வாழ்வா சாவா என்ற நிலையில் இருக்கும்போது மேலும் இருக்கன்துறை பகுதிகளில் குவாரி அமைத்து மக்களுக்கு கஷ்டம் ஏற்படுத்த வேண்டாம் எனவும் கூறினார். அதிகாரிகள் அவர்களுடைய பணிகளை முறையாக செய்தால், இக்குவாரிக்குஅனுமதி அளிக்க இயலாது எனக் கூறினார்கள்.

இருக்கன்துறை கிராமத்தில் பெரும்பாலானோர் விவசாயம் செய்கின்றனர் எனவும், தற்போது மழை அளவு குறைந்துள்ளது எனவும், கனிமங்களை வெட்டி எடுப்பதனால் நிலத்தடி நீர்ப்பாதைகள் தடுக்கப்பட்டு குவாரிகளில் தண்ணீர் தேங்கி, கிணற்றில் தண்ணீர் வற்றிவிடுவதாலும், நிலத்தடி நீர் மட்டம் குறைவதாலும் விவசாயம் பாதிப்படைகிறது எனவும் கூறினார்.

ஒரு மாதத்திற்கு அனைத்து குவாரிகளையும் இயக்கி அங்கு நீர் மற்றும் காற்று மாசு குறித்து ஆய்வு மேற்கொண்டு அப்பகுதி மக்களுக்கு அறிக்கை தரவேண்டும்.இதற்கு முன் 5 ஆண்டிற்கு அனுமதி வழங்கிய குவாரிகளில் எத்தனை குவாரிகளுக்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்று விவரம் தர வேண்டும் என தெரிவித்த அவர் தினமும் 1000 முதல் 2000–க்கு மேற்பட்ட வாகனங்கள் செல்வதால் காற்று மாசுபட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைகிறது. எனவே இக்குவாரிக்கு எவ்வித அனுமதியும் வழங்ககூடாது எனக் கூறினார்.

<u>திரு. எஸ்.பி.முத்துராமன், சுற்றுச்சூழல் ஆர்வலர், திருநெல்வேலி :–</u>

திரு.எஸ்.பி.முத்துராமன் அவர்கள் பேசுகையில் இராதாபுரம் வட்டத்தில் காற்றின் அளவு அதிகமாக உள்ளதால் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இந்த சுரங்க திட்டத்திற்கு 732 பக்க திட்ட அறிக்கையில், இந்த சுரங்க திட்ட பகுதிக்கு அருகில் காற்றாலை அமைந்துள்ளது என்பதை கூறவில்லை என குறிப்பிட்டார்.

மேலும், திட்ட அறிக்கையில் அனுமன் நதி, திட்ட பகுதியில் இருந்து 80 மீட்டர் தொலைவில் உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்கள் எனவும் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியமும் புதுடெல்லியில் அமைந்துள்ள தேசிய பசுமை தீர்ப்பாயமும் ஒரு வழக்கில் பிறப்பித்த உத்தரவில் சுரங்கத்தில் வெடிவைப்பு நடைபெறுமானால் 200 மீட்டர் சுற்றளவுக்குள் நதியோ அல்லது அல்லது பொதுமக்கள் சம்பந்தப்பட்ட எதுவும் இருக்கக்கூடாது எனவும் அப்படி அமைந்திருந்தால் அந்த திட்டத்திற்கு அனுமதி கொடுக்கக் கூடாது என உத்தரவிட்டுள்ளதாகவும், எனவே இந்த சுரங்கத்திற்கு அனுமதியே கொடுக்க முடியாது எனவும் கூறினார். மேலும் குவாரி திட்ட பகுதியில் அமைந்துள்ள காற்றாலை குறித்து திட்ட அறிக்கையில் குறிப்பிடவில்லை என கூறினார். திட்ட உரிமையாளரிடம் நீதிமன்ற உத்தரவை கடைபிடிக்க உள்ளீர்களா? இல்லை நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரவா? என கேள்வி எழுப்பினார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் ஆய்வு காலமானது மூன்று (3) மாதம் மட்டுமே என்பதால், ஆண்டின் அனைத்து பருவ காலங்களின் நிலை அய்வு செய்யப்படுவதில்லை. எனவே 4 பருவ காலங்களிலும் முறையாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தால் தான் சரியான தகவலாக இருக்க முடியும். மேலும் குவாரியை சுற்றி 500 மீட்டர் வரை அபாயகரமான பகுதி என புது டெல்லியில் உள்ள Director General of Mines and Safety தனது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக சுட்டிகாட்டினார். தற்போது சுரங்க திட்டத்திற்கு அனுமதி பெறும் நபர் புல எண்.644 மற்றும் 647–ல் ஏற்கெனவே 2015ம் ஆண்டு வரை ஒரு கல்குவாரியை நடத்தியுள்ளார் எனவும், அவர் விதிப்படி சுரங்கங்களை மூடும் திட்டத்தினை பின்பற்றவில்லை எனவும், குவாரியை சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கவில்லை எனவும் அதனால் விபத்து ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார்.

கைவிடப்பட்ட குவாரிகளை அரசு கையகப்படுத்தி முறையான பாதுகாப்பு மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாததால் ஆடு, மாடுகள் தவறி விழுந்து இறப்பதாகவும், ஆகவே வைவிடப்பட்ட குவாரிகளை குளங்களாக வகைப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் 10 டன் எடையுள்ள கனரக வாகனங்கள் பயன்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ளதாகவும் ஆனால் 40 டன் எடைக்கு அதிகமான கனரக வாகனங்களை திட்ட உரிமையாளர் பயன்படுத்துவார் எனவும் கூறினார்.

இருக்கன்துறை கிராமத்தில் அதிகமான குவாரிகளை அனுமதித்துக்கொண்டே இருக்கிறார்கள் எனவும், இருக்கன்துறை கிராமம் சல்லடையாக மாறிக்

கொண்டிருக்கிறது எனவும் தெரிவித்தார். இருக்கன்துறை பகுதியில் குவாரிகள் அதிகமாக காணப்படுவதாலும், கனரக வாகனங்கள் அதிகமாகச் செல்வதாலும் சாலைகள் பாதிக்கப்படுவதாகவும், காற்று மாசு, ஒலி மாசு ஏற்படுவதாகவும் தெரிவித்தார். கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த, சுற்றுச்சூழல் முன் அனுமதி பெற கருத்துக்கேட்பு கூட்டம் நடத்த வேண்டும் என்பது ஒரு நடைமுறை மட்டுமே எனவும் அதை கடைபிடிக்க வேண்டும் என்பதற்காகவே பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தை நடத்துகிறார்கள் எனவும் பேசினார்.

திட்ட அறிக்கையில் இந்த குவாரியை சுற்றி 500மீ–ல் ஏற்கெனவே இரண்டு குவாரிகள் செயல்பட்டு வருகிறது எனவும், ஒரு குவாரி மூடப்பட்டுள்ளதாகவும், ஆனால் குவாரி அமையவுள்ள இடத்திலிருந்து 2 முதல் 3 கிமீ தூரத்தில் அமைந்துள்ள கல்குவாரிகளை திட்ட அறிக்கையில் குறிப்பிடவில்லை எனவும், இருக்கன்குறை பகுதி 1 & 2 கிராமங்களில் அமைந்துள்ள மொத்த குவாரிகளின் எண்ணிக்கையையும் திட்ட அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளீர்களா எனவும் கேள்வி எழுப்பினார்.

குறிப்பு விதிமுறையில் இருக்கன்துறை பகுதி 1 கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலர் காற்றாலையை சுற்றி, ஆறு, பொது கட்டிடங்கள் கோவிலோ எதுவுமே இல்லை என குறிப்பிட்டுள்ளதாகவும், ஆனால் குவாரிக்கு அருகில் அமைந்துள்ள பனையடி இசக்கியம்மன் கோவிலையோ, அனுமன் நதியையோ ஆழ்துளை கிணற்றையோ புல எண் 612–ல் அமைந்துள்ள இரண்டு கட்டிடங்கள் பற்றியோ குறிப்பிடவே இல்லை. இவ்வாறு பொய் சான்று கொடுப்பது இந்திய தண்டனைச் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து எடுக்கப்படும் கல்லும் மண்ணும் கேரளா மாநிலத்திற்கு கொண்டுச் செல்லப்படுகிறது. நமது தேவைக்காக குவாரி அனுமதிக்கப்படுமேயானால் அது ஏற்றுக்கொள்ளக் கூடியது. ஆனால் பிற மாநில தேவைகளுக்காக இங்கே இருந்து கனிம வளங்களை எடுத்துச்செல்கிறார்கள் எனவும், இந்த சுரங்கத்தின் குத்தகை 09/09/2020–லிருந்து 5 வருடங்களுக்கு வாங்கியுள்ளதாகவும் அது 08/09/2025–ல் முடிவடையும் என்பதாகவும் முடிவடையும் காலத்திற்கு பின் தான் சுற்றுத்சூழல் அனுமதி கிடைக்கும் எனவும் கூறினார். தான் பல்வேறு கருத்துக்கேட்பு கூட்டங்களில் கலந்து கொண்டு பல்வேறு கருத்துக்களை பதிவு செய்துள்ளதாகவும் இத்திட்டத்திற்கு அனுமதி அளிப்பது முடியாது எனவும், அனுமதி அளித்தால் அது நீதிமன்றத்தை அவமதிப்பதாகும் என்று கூறினார்.

<u>திருமதி.இந்திராமுருகேசன், ஊராட்சி மன்ற தலைவி – இருக்கன்துறை :–</u>

திருமதி.இந்திராமுருகேசன் அவர்கள் பேசுகையில் இருக்கன்துறை கிராமத்தில் குவாரிகள் அதிகமாக உள்ளன எனவும் இந்த கல் குவாரி அமைய உள்ள இடத்திற்கு அருகில் ஐந்து சமுதாய மக்களுடைய சுடுகாடுகள் உள்ளதால் மக்கள் பாதிக்கப்படுவார்கள் எனவும் குவாரி அமையவுள்ள இடத்திற்கு அருகில் புத்தேரி கிராமம் அமைத்துள்ளதால் அப்பகுதி மக்கள் பாதிப்படைவார்கள் எனவும் கூறினார். இருக்கன்துறை ஊராட்சி பகுதியில் குவாரிகள் அதிகம் உள்ளதால் தண்ணீர் பிரச்சனை அதிகமாக உள்ளது எனவும் குடிநீருக்கு அதிக விலைக்கொடுத்து வாங்கும் நிலையில் உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

குவாரிக்கு எதிர்ப்பு தெரிவித்து ஏற்கனவே மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளதாகவும், பொது மக்கள் சார்பாக தற்போது தங்களிடம் மனு அளிக்கிறேன் என கூறி மனுவும் அளித்தார்கள். மேலும், இருக்கன்துறை பஞ்சாயத்திற்கு கல்குவாரிகள் வேண்டாம், எந்த கல்குவாரிக்கும் அனுமதி வழங்ககூடாது எனவும் கூறினார்.

<u>திரு.கணேசன், மாவட்ட செயலாளர், நாம் தமிழர் மக்கள் கட்சி, கூடன்குளம்:–</u>

திரு.கணேசன் அவர்கள் பேசுகையில் இராதாபுரம் பகுதியில் நடத்தப்பட்ட அனைத்து கல்குவாரிகளுக்கான பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்திலும் மனு அளித்துள்ளாம். ஆனால் தற்போது மனு அளிக்கவில்லை, ஏனெனில் மனு அளிப்பதனால் எந்த வித

பயனும் இல்லை எனவும் கல்குவாரி எதிர்த்து மனு அளிப்பவர்கள் கொல்லப்படுகின்றனர் எனவும் கூறினார். மேலும் அவர் கூறுகையில், ஒவ்வொரு கல்குவாரிகள் அமையும் இடங்களிலும் தோட்டம் மற்றும் விளைநிலங்கள் உள்ளன எனவும் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளலாமா என்ற நிலையில் உள்ளனர் என்றார். ஏனெனில் கிணறுகள் மற்றும் குளங்களில் தண்ணீர் இல்லை. அதற்குக் காரணம் கல்குவாரிகள் 300 அடிகளுக்கு தோண்டுகின்றனர், ஆனால் கிணறுகள் 100 அடிகள் மட்டுமே தோண்டப்படுகிறது எனவும் அனைத்து ஊர்களிலும் கல்குவாரி வேண்டாம் என்று கூறினார். தற்போது தனிபெரும் வியாபாரிகளின் இலாபத்திற்காக கிராமங்கள் மற்றும் விவசாயிகளை அழிக்கின்றனர் எனவும் இப்பகுதியில் கல்குவாரி அமைவதில் எந்த விவசாயிகளுக்கும் விருப்பம் இல்லை எனவும் கூறினார். இப்பகுதியில் அமைந்துள்ள குவாரி உரிமையாளர்களுக்கு எதிராக போராட்டம் செய்ய யாருக்கும் தைரியம் இல்லை எனக்கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், இருக்கன்துறை கிராம மக்கள் அனைவரும் விவசாயிகள் ஆனால் அவர்கள் விவசாயம் செய்வதற்கு தண்ணீர் இல்லை எனவும் விவசாயிகள் நமக்காக உழைக்கிறார்கள், ஆனால் அவர்கள் தண்ணீர் இல்லாமல் இப்படி செய்வது அநியாயம். எனவே இந்த கல்குவாரி வருவதை அனுமதிக்க மாட்டடோம். எங்கள் கட்சியின் சார்பாக கடுமையாக போராடி இக்கல்குவாரி அமைவதை தடுப்போம் எனக் கூறினார்.

**திரு, சுந்தரலிங்கம், கூடன்குளம்:–**

திரு.சுந்தரலிங்கம் அவர்கள் பேசுகையில் தான் ஒரு விவசாயி என்பதாவும் உழவர் ஆர்வலர் குழுவில் தலைவராக இருக்கிறேன் எனவும் தெரிவித்தார். உழவர் ஆர்வலர் குழுவிலிருந்து கல்குவாரிக்கு எதிர்ப்பு தெரிவித்து வேளாண்மை துறையில் தெரியப்படுத்தினால் அவர்கள் வேலையிட மாற்றம் செய்துவிடுவார்கள் என பயப்படுகிறார்கள் எனவும் விவசாயிகள் பாதிக்கப்படுவதால், கருத்துக்கேட்புக் கூட்டத்தில் தான் பங்கேற்றுவருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் பேசுகையில் இருக்கன்துறையில் அமைந்துள்ள L & T குவாரியால் திரு. வைத்தியலிங்கம் என்பவரது தோட்டத்தில் அமைந்துள்ள கிணறு பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு மனு கொடுத்தும் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்பதாகவும் கூறினார். சில திட்டம் குறித்த அறிக்கையில் அருகில் உள்ள ஆறுகள் மற்றும் நினைவிடங்கள் ஏதும் இல்லை என தவறாக தாசில்தார் தெரிவித்துள்ளார் எனவும், இருக்கன்துறை கிராமத்தில் கல்குவாரி அமைக்க அனுமதி அளிக்க கூடாது எனவும் கூறினார்.

**திரு. சுடலையாண்டி, சங்கநேரி :–**

திரு.சுடலையாண்டி அவர்கள் பேசுகையில் கருத்து கேட்பு கூட்டம் இருக்கன்துறை பகுதியில் நடப்பதுதான் சிறந்ததாக இருக்கும். ஏனென்றால் இருக்கன்துறையை சேர்ந்தவர்கள் யாரும் இங்கு இல்லை எனவும் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தும்போது மறுப்பு சொல்வதற்கு சம்பந்தப்பட்ட வட்டாச்சியர்கள், கிராம நிர்வாக அதிகாரிகள் யாரும் வருவதில்லை. இந்த கருத்து கேட்பு கூட்டம் கண் துடைப்பு கூட்டம் தான்எனவும் கூறினார்.

தான் இதுவரை மாசு கட்டுப்பாடு வாரியத்தில் 3 தகவல் பெற்றுள்ளதாகவும் அந்த தகவல்களில் எங்கள் பகுதியில் காணப்படும், மீன் நிறுவனம், தும்பு ஆலைகள், கல்குவாரிகள் ஆகியவை 90 % நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ளதாகவும் நிலத்தடி நீரும் விவசாயமும் அழிந்து விட்டது எனவும் கூறினார். இப்பகுதி மக்கள் கால் நடை வளர்ப்பு மற்றும் விவசாயம் செய்வதாக கூறினார். குடிதண்ணீர் பற்றி ஆய்வு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் மேற்கொள்ளபட்டுள்ளதா என கேள்வி எழுப்பினார்.

இங்கு செயல்படுகின்ற கல்குவாரி, மீன் கம்பெனி தொடர்பாக தகவல் கேட்டதற்கு வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு இருக்கன்துறை பகுதிக்கு சம்பந்தப்பட்ட கோப்புகள் எங்களிடம் இல்லை என்றும், சம்பந்தப்பட்ட இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம் இருக்கன்துறை கிராமத்தை பற்றி கேளுங்கள் என்றும்

கூறினார்கள் எனவும் இதில் மாசு கட்டுப்பாடு வாரியம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தார்.

இராதாபுரம், மணியம்மை மஹாலில் 30.04.2023 அன்று நடைபெற்ற கருத்துகேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட 173 பேர்களில், தங்களது கருத்துகளை பதிவு செய்தவர்கள் நான் உட்பட 32 பேர் எனவும் அந்த கருத்துக்கேட்பு கூட்டத்தில் கருத்து சொன்னவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் மரியாதை இல்லை. ஏனென்றால், அதில் 7 பேர் கல்குவாரிக்கு ஆதரவாகவும், 25 பேர் மறுப்பும் தெரிவிந்த நிலையிலும் குவாரிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது எனவும், ஜனநாயக நாட்டில் எண்ணிக்கைதான் முக்கியம், ஆனால் கருத்துக் கேட்பு கூட்டத்தில் பங்கேற்பவர்களுக்கு மதிப்பு அளிக்கவில்லை என்றால் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தி பயன் இல்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் 27/08/2024 தினத்தந்தி நாளிதழ் செய்தியில், நெல்லை மாவட்டத்தில் உள்ள கிராம சாலைகளில் கனரக வாகனங்கள் மூலம் கனிமங்களை கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது எனக் கூறி கனரக வாகனங்களின் செயல்பாடு குறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்தி குறிப்பை முழுவதுமாக படித்து காட்டி, அந்த ஆணை தற்போது நடைமுறையில் உள்ளதா என கேள்வி எழுப்பினார். இப்பகுதியில் ஏற்கனவே வாழ்வாதாரங்கள் முடிந்து போய்விட்டது எனவும், எங்கள் ஊரில் சுத்தமான தண்ணீர் கிடைப்பத்தில்லை எனவும், விவசாயம் பாதிக்கப்படுகிறது எனவும் இதை எல்லாம் நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.மேலும், கண் துடைப்பு கூட்டம் நடத்திவிட்டு போனால் உங்களுக்கும் மரியாதை இல்லாமல் போய்விடும் எனவும் கூறினார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், எங்கள் ஊராட்சி மன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளதகாவும், ஊராட்சிமன்ற தீர்மானமானது சட்டசபை மற்றும் பாராளுமன்ற தீர்மானத்தை போல் முக்கியத்துவம் வாய்ந்தது எனவும், பஞ்சாயத்து தீர்மானம் என்பது எங்கள் உணர்வு, எங்கள் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கவேண்டும் எனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்வதாகவும் கூறினார். எங்கள் ஊராட்சிமன்ற தீர்மானத்தை நிறைவேற்றினாலே, இந்த கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு அவசியம் இல்லை எனவும், பெரும்பாலானோர் முடிவு என்ன இருக்கிறதோ அதற்கு இந்த கூட்டம் கட்டுப்பட வேண்டும் எனவும், கூட்டத்தின் முடிவு இறுதி முடிவாக இருக்கவேண்டும் எனக் கூறி எங்கள் ஊராட்சி மன்றத்தின் தீர்மானத்தை வெற்றி பெற வேண்டும் எனவும், குவாரிக்கு அனுமதி அளித்தால் போராட்டத்தில் ஈடுபடவும் தயாராக இருக்கின்றோம் எனவும் கூறினார்.

<u>திரு. நித்தியானந்த், கூடன்குளம்:–</u>

திரு. நித்தியானந்த் அவர்கள் பேசுகையில், தான் இதுவரை நிறைய கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளதாகவும் இதுவரை சாமானிய மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை எனவும், எதற்கு இந்த கருத்து கேட்பு கூட்டம் எனவும் கேள்வி எழுப்பினார். தான் கூட்டத்தில் கொடுப்பதற்கு மனு கொண்டு வந்ததாகவும், ஆனால் தற்பொழுது தரப்போவது இல்லை என்றும், ஏனென்றால் தங்களிடம் தருவதனால் எந்த பயன் இல்லை எனவும் கூறினார். அவர் ஒவ்வொரு கருத்து கேட்பு கூட்டத்திலும் தங்களது கருத்துக்களை கூறிக்கொண்டுள்ளதாகவும் ஆனால் யாரும் அதை கேட்பதாக இல்லை என்றும் இது வெறும் கண்துடைப்பு தான் எனவும் கூறினார். மக்கள் இருந்தால் தான் அரசாங்கம் இருக்கும், அரசு அதிகாரி இருப்பார்கள். மக்கள் இல்லை என்றால் யாரும் இருக்கமுடியாது என்றும் கூறினார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், இராதாபுரத்தில் அதிக கல்குவாரிகள் இருப்பதனால் அந்த பஞ்சாயத்திற்கு நிதி வருவதாக கூறுகின்றனர். ஆனால் அந்த நிதியினால் பள்ளி கல்லூரிகள் எதுவும் கட்டப்படவில்லை எனக் கூறினார். சேலத்தில் உள்ள ஒருவர் எல்லா கருத்துக்கேட்பு கூட்டத்திலும் யார் மனு கொடுக்கின்றனர் என்று பார்க்க வருவதாகவும் கூறினார். பத்து விவசாயிகளுடன் மனு அளிப்பதற்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு தான் சென்றதாகவும், அப்போது பத்திரிக்கையாளர்கள் புகைப்படம் எடுப்பதற்கு வந்ததாகவும் தன்னுடன் வந்தவர்கள்

4000 ரூபாய் கொடுத்தால் தான் செய்தித்தாளில் போடுவார்கள் என புகைப்படம் எடுப்பதற்கு அனுமதிக்கவில்லை என்பதாகவும் கூறிய அவர் நாடு எதை நோக்கி செல்கிறது இது ஜனநாயக நாடா அல்ல அராஜக நாடா என்று தெரியவில்லை அந்த அளவிற்கு மோசமாக உள்ளது என தெரிவித்தார்.

தற்போது அமையவிருக்கும் குவாரியானது அணு உலையிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளதாகவும், ஆனால் இனி வரும் 4,5,6 அணு உலைகள் வந்தால் குவாரியானது சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவிற்குள் வந்துவிடும் எனவும், தற்போது குவாரிகளில் வெடி வைத்தால் கூடன்குளத்தின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் தனது கடையில் அதிர்வுகள் ஏற்படுவதகாவும் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், விடுமுறை தினத்தன்றும் மாலை நேரங்களுக்கு பின்பும் கனரகவாகனங்களில் கல் எடுத்துச் செல்வதாகவும், தங்களால் லாரியின் குறுக்கே நின்று தடுக்க முடியாது எனக் கூறினார், மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து கல்குவாரி அனுமதி நிராகரிக்கப்படுகிறதா எனவும் கேள்வி எழுப்பினார்.

சாமானிய மக்களின் வாழ்க்கை தரம் எவ்வாறு உயர்ந்திருக்கிறது என்று அதிகாரிகள் பார்க்க வேண்டும் எனவும், இருக்கன்துறை கிராமத்தில் உள்ள பள்ளி அருகில் இன்று சென்று பார்த்தால் சாலையில் தண்ணீர் அடித்திருக்கிறார்கள். ஆனால் மற்ற நாட்களில் புழுதியாக இருக்கும் எனவும் கூறினார்.

மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தால், சாமானிய மக்களின் கருத்திற்கு மதிப்பில்லை எனவும், தனது தொலைபேசியில் 17 குவாரிகளின் புகைப்படம் எடுத்துள்ளதாகவும் கைவிடப்பட்ட குவாரிகளில் 252 அடி தோண்டியுள்ளனர் அதில் பச்சை நிறங்களில் நீர் தேங்கி உள்ளது எனவும், முற்காலங்களில் கிணறுகளில் 60 முதல் 100 அடி மட்டும் தோண்டியுள்ளனர்.எனவே கிணறுகளில் தண்ணீர் எப்படி இருக்கும் எனக் கூறினார். கல்லை கடித்து சாப்பிடமுடியாது எனவும், விவசாயம் இருந்தால் மட்டுமே சாப்பிட முடியும் என கூறிய அவர் அரசியல்வாதிகள் நெருக்கடி கொடுத்தாலும், அதிகாரிகள் கையெழுத்து போட மறுத்தால் இராதாபுரத்தில் கல்குவாரிகள் வராது எனவும் நான்கு ஊர்மக்கள் சேர்ந்து இந்த கல்குவாரிகளை எதிர்ப்போம் எனவும், எங்களை சிறையில் அடைத்தாலும் பரவாயில்லை எனவும் தெரிவித்தார்.

இருக்கன்துறையில் உள்ள மீன் அரவை ஆலைகளில், வெயில் காலங்களில் துர்நாற்றம் தெரிவதில்லை. ஆனால் மழை காலங்களில் கூடன்குளம் வரை துர்நாற்றம் வீசுகிறது எனவும் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கடல்மட்டத்தில் அரிப்பு ஏற்படுகிறது எனவும் கண்டிப்பாக கல்குவாரியினால் இங்கு நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது எனவும், 2021 ஆம் ஆண்டு பணகுடி மலைகளையொட்டி நிலநடுக்கம் உணரப்பட்டதாகவும், ஆனால் அரசு இங்கு அணுமின் நிலைய உள்ளதால் நிலநடுக்கம் ஏற்படவில்லை என்று கூறியது என தெரிவித்தார்.

கருத்துக்கேட்பு கூட்டத்தில் நிறைய எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் அதனால் குவாரிக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று நிராகரிப்பு செய்யப்படுவதில்லை எனவும், கேரளாவில் காலை 7 முதல் இரவு 7 மணி வரை லாரிகள் இயக்ககூடாது என்ற விதி இருப்பினும் தமிழ்நாட்டில் இருந்து கற்கள் எடுத்துச்செல்லபடும் லாரிகளுக்கு 24 மணி நேரமும் அனுமதி வழங்கப்படுகிறது எனவும் கைவிடப்பட்ட குவாரிகளில் 65 சதவீதம் குழிகளை நிரப்பி அதனை மழை சேகரிப்பு மையமாக மாற்றுவதாக கூறுகின்றனர். இதுவரை எந்த குவாரிகளாவது இதனை செய்திருக்கின்றனர் என்று கூற முடியுமா என வினவியவர், இது அனைத்தும் கண் துடைப்பு எனக் கூறினார்.

இன்று உலக பூமி தினம், ஆனால் பூமியை வெட்டி எடுப்பதற்கான கூட்டத்திற்கு வந்துள்ளளோம் என்றும் அதனால் இதற்கு அனுமதி வழங்ககூடாது எனக் கூறியவர், இந்த கல்குவாரியினால் அணு உலை வெடிப்பதற்கு வாய்ப்புள்ளது என்றும் இப்பகுதி மக்களுக்கு பேரிடர் மேலாண்மை பயிற்சிகூட கொடுத்தில்லை எனவும் கூறினார்.

<u>திருமதி. சகாய இனிதா, விஜயாபதி ஊராட்சி, இடிந்தகரை கிராமம்:-</u>

திருமதி. சகாய இனிதா அவர்கள் பேசுகையில் தான் ஒரு மீனவப் பெண் என்றும் நாம் தமிழர் கட்சியின் மாநில மகளிர் பாசறை ஒருங்கிணைப்பாளராக இருப்பதாகவும்

அறிமுகப்படுத்திக் கொண்டார். தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியை சேர்ந்த நபர் இராதாபுரம் வட்டம், இருக்கன்துறையில் குவாரியை அமைக்க இருக்கிறார் என்பதாகவும் பத்திற்கும் மேற்பட்ட கல்குவாரி கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டு எதிர்ப்பு தெரிவித்துள்ளதாகவும், மனுக்கள் கொடுத்தாகவும், அந்த மனுக்களுக்கு இதுவரையிலும் மதிப்பளித்து எந்த குவாரிகளும் ஆய்வு செய்து, குவாரிகள் ஏதும் தடைசெய்யப்படவில்லை என்று கூறினார். மேலும், நேற்றைய தினமே கல்குவாரிக்கு அனுமதி வழங்கப்பட்டு விட்டதாஎன கேள்வி எழுப்பினார். நேற்றைய தினமே கல்குவாரிக்கு அனுமதி அளித்துவிட்டு தான், கண் துடைப்புக்காக இன்றைய தினம் கருத்துக் கேட்பு கூட்டத்தை நடத்துவதாகவும் அதனால் அவர் இன்றைய தினம் கோரிக்கைகளை எடுத்துவரவில்லை என்பதாக தெரிவித்தார். இருக்கன்துறை கிராமத்தில் தான் கல்குவாரி அமைக்க உள்ளனர் பின் ஏன் செட்டிக்குளம் கிராமத்தில் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்துகின்றனர் என கேள்வி எழுப்பினார். இருக்கன்துறை ஊராட்சி மன்ற தலைவி தன் கருத்தை பதிவு செய்தார்கள், அவரின் உயிருக்கு உத்திரவாதம் இல்லை என்பதாகவும் எனவே அவருக்கு காவல்துறை பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதாகவும், கல்குவாரி வாகனங்களை தடுத்ததற்காக பல்வேறு அதிகாரிகள் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் எனவே பாதுகாப்பு வழங்க வேண்டும், எனவும் கூறினார். தூத்துக்குடி மாவட்டத்தை சார்ந்த நபர் அந்த மாவட்டத்திலேயே கல்குவாரிக்கு அனுமதி வாங்கி கொள்ளாமல் ஏன் திருநெல்வேலி மாவட்டத்தை தேர்வு செய்கிறார்கள் எனவும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் வேறு மாநிலத்திற்கு கனிம வளங்களை கொண்டு செல்வதற்கு கல்குவாரி தேவையா என கேள்வி எழுப்பினர். கூடன்குளம் அணுஉலையிலிருந்து 10 கி.மீ. சுற்றளவிற்கு எந்தவித கனிம வளங்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது என 2010 –11 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தெரிவித்தாகவும் இருக்கன்துறை கிராமத்தில் ஏற்கனவே 15க்கும் மேற்பட்ட கல்குவாரிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளதாகவும், இப்பொழுது இருக்கன்துறை கிராமத்தில் கல்குவாரிக்கு கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறுவதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் கல்குவாரி வாகனங்களால் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இருக்கன்துறையில் கல்குவாரிகளில் கல் எடுப்பதை நிறுத்த வேண்டும் எனவும் கல்குவாரிகளுக்கு அனுமதி வழங்ககூடாது எனவும் தெரிவித்தார்.

மேலும் இதற்கிடையில் அரசியல் குறித்து பேசியபோது உதவி ஆணையர் (கலால்) அவர்கள் குறிக்கீடு செய்து கல்குவாரி வேண்டுமா? வேண்டாமா? என்ற கருத்தை மட்டும் கூறுமாறு தெரிவித்தார்கள். இவர் அரசியல் குறித்து பேசியதால் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து பேசிய திருமதி. சகாய இனிதா அவர்கள் இராதாபுரம் தொகுதி இருக்கன்துறை கிராமத்தில் நடக்கும் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு கன்னியாகுமரி மாவட்டம் அழகப்பபுரம் பகுதியிலிருந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொள்ள மக்கள் வந்துள்ளதாகவும் அவர்களை பேச அனுமதிக்க கூடாது எனவும் கூறினார். மேலும் ஒரு கிராமத்தை அழிக்க விடமாட்டோம் எனவும், 5 சமுதாய மக்களுக்கு பொதுவாக இருக்கும் சுடுகாட்டை குவாரி அமைத்து அழிக்கஇருப்பதாகவும் கூறினார். காலை 8 மணி முதல் 10 மணி வரை மற்றும் 10 சக்கர கனரக வாகனங்கள் அனுமதிக்க கூடாது என மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் உத்தரவிட்டிருந்தாகவும் தற்போது 10 சக்கரங்களுக்கு மேற்பட்ட கனரக வாகனங்கள் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும்,இருக்கன்துறை கிராமத்தில் கல்குவாரிக்கு அனுமதி வழங்க கூடாதுஎனவும்கூறினார்.

<u>திரு.சுயம்பு லிங்கம், கூடங்குளம்:–</u>

திரு.சுயம்பு லிங்கம் அவர்கள் பேசுகையில் தான் ஒரு விவசாயி இருக்கன்துறை சுற்றுவட்டாரப் பகுதியில் கிணற்றின் ஆழம் 80 முதல் 90 அடியில் உள்ளது எனவும் கல்குவாரியினை 250 முதல் 300 அடி ஆழப்படுத்தியுள்ளனர், எனவே விவசாயிகளுக்கு தண்ணீர் இல்லாமல் போய்விடும் என்பதாகவும் கிணற்றில் தண்ணீர் இல்லை யென்றால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் எனவும் இந்த கோரிக்கை ஒன்றை

கருத்தில் கொண்டு கல்குவாரியை நிறுத்த வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக் கொள்வதாகவும் கூறினார்.

**திரு.பொன்ராஜ், இருக்கன்துறை :–**

திரு.பொன்ராஜ் அவர்கள் பேசுகையில் இங்கு அனைவருக்கும் கல், மண் உள்ளிட்ட பொருட்கள் இருக்கன்துறையிலிருந்து தான் வருகிறது. தொழில் வளம் வர வேண்டும் எனவும், தொழில் வளம் வளர்ந்தால் தான் நாடு முன்னேறும் என கூறினார்.

இவ்வாறு அவர் தன் ஆதரவை தெரிவித்த போது கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. பின்னர் உதவி ஆணையர், கலால் அவர்கள் மற்றவர்கள் பேசும் போது குறிக்கீடு செய்யாமல் கருத்தை பதிவு செய்யுமாறு அறிவுறுத்தினார்கள்.

பின்னர் அவர் தொடர்ந்து பேசிய பொழுது,ஏற்கனவே கல்குவாரிகள் அதிகம் இருக்கின்றது. மீன் கம்பெனி, கல்குவாரியை வைத்து தான் வேலைவாய்ப்புகள் வருகிறது. தான் இருக்கன்துறையை சேர்ந்த ஒரு வழக்கறிஞர் என்பதாகவும் சேனார் குளம், பொன்னார் குளம், புத்தேரியை சேர்ந்த மக்கள் அனைவரும் மீன் கம்பெனி, கல்குவாரி, மற்றும் தும்பு ஆலைகளில் பணிபுரிந்து வருவதாகவும், தொழில் வளம் தனது பகுதிக்கு தேவை எனக்கூறினார்.கூடங்குளம் அணு உலைக்கு எதிர்ப்பு தெரிவித்துவருவதால், அங்கு மற்ற மாநிலத்தவர்களே அதிகம் பணிபுரிவது போல், நாம் வேலையில்லாமல் இருக்க நேரிடும் எனவும், எல்லா தொழில் வளங்களும் தொடங்கலாம் எனவும் கூறினார். மேலும் கனரக வாகனங்கள் வைத்துள்ளவர்கள், கல்குவாரி மற்றும் கிரஷர் நிறுவனங்களில் தான் வேலை வாய்ப்பு பெறுகின்றார்கள் என குறிப்பிடும் போது மீண்டும் சலசலப்பு ஏற்பட்டது அதனை தொடர்ந்து தன் ஆதரவை தெரிவித்து கருத்தை நிறைவு செய்தார்.

**திரு. காமராஜ், சமூக ஆர்வலர், இராதாபுரம் :–**

திரு.காமராஜ் அவர்கள் பேசுகையில் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இருக்கன்துறை பகுதி –1 கிராமத்தில் கல்குவாரி நடத்துவதற்கு ஜேக்கப்ராஜாமணி என்பவர் அனுமதி கேட்பது சிறுகனிம சட்ட விதிப்படி முற்றிலும் தவறு எனவும், இந்த கல்குவாரி அமைய உள்ள சர்வே எண்கள். 613, 643 ஆகிய இடங்களின் அருகில் மயான சுடுகாடு அமைந்துள்ளதாகவும். சிறுகனிம சட்ட விதி படி ஒரு கல்குவாரி அமைய உள்ள இடத்தின் 50 மீ தொலைவில் எந்தவிதமான மயான சுடுகாடுகள் அமைந்திருக்க கூடாது, ஆனால் குவாரி அமையவுள்ள 613 சர்வே எண்ணின் அருகில் உள்ள சர்வே எண்.612–ல் 10 மீ தொலைவில் சுடுகாடு அமைந்துள்ளதாகவும்,ஆனால் இருக்கன்துறை கிராம நிர்வாக அலுவலர் குவாரியின் அருகில் சுடுகாடு எதுவும் இல்லை என்று சான்று வழங்கியுள்ளார் எனவும், அதன் அடிப்படையில் தான் இப்போது இந்த கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்படுகிறது எனவே இந்த கல்குவாரிக்கு கருத்துக்கேட்பு கூட்டமே நடத்த முடியாது எனத் தெரிவித்தார்.

தமிழ்நாடு மின்சார சட்ட விதிப்படி கல்குவாரி அமையுள்ள இடத்திலிருந்து 300 மீ தொலைவில் காற்றாலையோ, உயர் மின் கோபுரங்கள் இருக்கக்கூடாது என்று சட்டம் கூறுகிறது எனவும், ஆனால் கல்குவாரி அமையவுள்ள சர்வே எண். 643–லிருந்து 200 மீ தொலைவில் இரண்டு காற்றாலைகள் உள்ளது எனவும், அதனை மறைத்து இந்த கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்படுகிறது என்பதாகவும் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில் கல்குவாரி அமையவுள்ள இடத்தில் இருந்து 50 மீ தொலைவில் வண்டி பாதை இருந்தாலோ அல்லது நீர்வழி பாதை இருந்தாலோ சிறு கனிம சட்டப்படி கல்குவாரிக்கு அனுமதி வழங்ககூடாதுஎனவும், ஆனால் சர்வே எண். 613, 643–லிருந்து 50 மீ தொலைவில் ஒரு ஆழ்துளை கிணறு மற்றும் வண்டி பாதையும் உள்ளது என்பதை மறைத்து ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில் ஒரு கல்குவாரிக்கு கருத்து கேட்பு கூட்டம் நடத்த சுமார் 1300 ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும் ஆனால் இந்த கல்குவாரி 45

ஆவணங்கள் மட்டுமே சமர்ப்பித்து இந்த கருத்துக் கேட்பு கூட்டம் நடத்துகிறது எனவும் இதுவே சட்டத்துக்கு புறம்பாக நடக்கிறது எனவும் கூறினார்.

கல்குவாரி அமையவுள்ள புல எண்ணிலிருந்து 500 மீ தொலைவில் நீர்நிலைகள் இருக்ககூடாது. ஆனால் கல்குவாரி அமையுள்ள இடத்திலிருந்து 200 மீ தொலைவில் குளம் உள்ளது அதனையும் இந்த ஆவணங்களில் மறைத்துள்ளதாக தெரிவித்தார்.

கல்குவாரி அமையுள்ள இடத்தில் இருந்து 200 மீ தொலைவில் ஆலயங்களோ, வீடுகளோ இருந்தால் கல்குவாரிகளுக்கு அனுமதி வழங்ககூடாது எனவும், 2024-ம் திண்டுக்கல் மாவட்டத்தில் கல்குவாரியில் வெடி விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அதன் பிறகு மதுரை உயர் நீதிமன்ற தீர்ப்பில் 100 வருடங்களுக்கு முன் மக்கள் குடியிருந்து தற்போது சிதிலமடைந்த வீடுகளும் வீடுகளாகதான் கருதப்படும் என்பதாகவும், ஆனால் கல்குவாரி அமையுள்ள இடத்திலிருந்து 200 மீ தொலைவில் இசக்கியம்மன் கோவில் உள்ளதுஎனவும், அதனை ஆவணங்கள் கூறிப்பிடவில்லை எனவும், சிறு கனிம சட்டத்தையும் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரிய சட்டத்தையும் மீறி ஆவணங்கள் தாக்கல் செய்து கருத்துக்கேட்பு கூட்டம் நடத்துகின்றனர்எனவும், ஆகவே சிறு கனிம சட்டம் 1959, பிரிவு 36 (1) படிதான் கல்குவாரிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும், ஆனால் அமையவுள்ள கல்குவாரியானது அதனை மீறியுள்ளது எனவும், ஆகவே அதற்கு அனுமதி வழங்ககூடாது என்று கேட்டுக்கொள்வதாகவும் கூறினார்.

<u>திரு.அர்ஜுனன் , 6வது வார்டு உறுப்பினர், இருக்கன்துறை :-</u>

திரு. அர்ச்சுனன் அவர்கள் பேசுகையில் கல்குவாரிக்கு எதிராக மனுக்கள் அளித்து தோல்வி தான் அடைந்துள்ளோம் என்பதாகவும், இது தொடர்பாக கடந்த மாதம் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தேன் எனவும், இருக்கன்துறை ஊராட்சி எந்த ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்றது எனத் தெரியாமல் இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளதாக விளம்பரம் செய்துள்ளதாக கூறினார்.

மேலும் அவர் கூறுகையில் அதிகாரிகள் யாரும் நமக்கு உதவப்போவது இல்லை, மக்களாகிய நாம் தான் போராட வேண்டும் எனவும், கல்குவாரியை இருக்கன்துறை ஊராட்சியில் தான் அமைக்க முடியுமா வேறு எங்கும் அமைக்க முடியாதா எனக் கேள்வி எழுப்பினார். இதற்கு முன் மண் தட்டுப்பாடு ஏற்பட்ட போது அரசாங்கமே திருச்சியில் இருந்து மண் கொண்டுவந்தார்கள் எனவும், அதே போல் எந்த பகுதிக்கு கல் தேவையோ அங்கே கல்குவாரி அமைக்கலாம் எனவும், இங்கு கல்குவாரி அமைப்பதால் விவசாயம் அழிகிறது எனவும், அதனால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், வேலை இல்லாமல் திண்டாடுகிறார்கள் எனவும், ஆனால் இதற்கு அறிக்கை வழங்கும் சம்பந்தபட்ட அதிகாரிகள் இதனை தெரிவிக்கவில்லை எனக் கூறினார்.

தொடர்ந்து அவர் கூறுகையில் இதற்கு முன் ஒரு கல்குவாரியை தடைச் செய்ய வேண்டி தாசில்தாரிடம் மனு அளித்ததாகவும், அதற்கு மாவட்ட ஆட்சியர்தான் பதில் அளிக்க வேண்டும் என்று கூறியதாகவும், அங்கும் சரியான பதில் தரவில்லை என்பதாவும் தெரிவித்தார். இருக்கன்துறையில் விவசாயம் பாதிக்கப்படுவதற்கு காரணம் நிலத்தடி நீர் குறைந்துவிட்டதாகவும், பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீர் வரவில்லை எனவும், கல்குவாரிகள் வருவதற்கு முன் பேச்சிப்பாறை அணையிலிருந்து வரக்கூடிய தண்ணீர் 52 குளங்களை நிரம்பியதாகவும், ஆனால் தற்போது 10 சதவீதம் கூட நிரம்புவதில்லை எனவும் கூறினார்.

இந்த குவாரிக்கு ஒரு அரசியல்வாதி பினாமி மூலம் விண்ணப்பித்துள்ளார் எனவும், அரசியல்வாதி தரப்பிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மக்கள் வந்துள்ளனர் எனவும், கன்னியாகுமரி பகுதி மக்களுக்கும் இருக்கன்துறை பகுதி மக்களுக்கு என்ன சம்பந்தம், செட்டிகுளத்திற்கும் இருக்கன்துறைக்கும் என்ன சம்பந்தம் எனக் கேள்வி எழுப்பிய அவர், கன்னியாகுமரியில் இருந்து கூலிக்கு இங்கு வந்து ஆதரவு தெரிவிக்கின்றனர். எனவும் உலக தண்ணீர் விழா அன்று இருக்கன்துறை கிராமத்தில் கல்குவாரி வரக்கூடாது என்றும், மேலும் எந்த கல்குவாரிகளும் அனுமதி புதுப்பிக்க கூடாது எனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும் கூறினார்.

திரு. குமரேசன், செட்டிகுளம்:-

திரு.குமரேசன் அவர்கள் பேசுகையில் தனது விவசாய நிலம் இருக்கன்துறையில் உள்ளது எனவும்,தனது விளைநிலத்திற்கு 200 மீ அருகில் ஒரு கல்குவாரி உள்ளது எனவும், அந்த கல்குவாரியின் மேற்கு பகுதியில் அனுமன் நதி உள்ளது எனவும், இந்த கல்குவாரியினால் பயிர்களுக்கு போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை எனவும் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், குவாரிகளில் வெடி வைப்பதினால் அருகில் உள்ள பகுதிகளில் நில அதிர்வு ஏற்படுகிறது எனவும் கூறினார். இருக்கன்துறை கிராமத்தில் அதிக அளவில் குவாரிகள் இருக்கின்றன எனவும்,இருக்கன்துறை கிராமத்தை சுற்றியும் கல்குவாரிகள் தான் உள்ளது, வீடுகள் ஏதுவும் இல்லை என்பதாகவும் சுற்றியுள்ள 4 கிராமங்களில் வீடு கட்டுவதற்கு ஒரு கல்குவாரி போதும் எனவும் கூறினார்.

கல்குவாரி வருவதனால் நீர் நிலை பாதிக்கபடுகிறது எனவும் குவாரியில் இருந்து வரும் காற்று மாசுவினால் வெள்ளரி கத்திரிக்காய் போன்றவைகளில் மகரந்த சேர்க்கை பாதிக்கப்பட்டு விவசாயம் பாதிக்கப்படுகிறது. எனவே கல்குவாரிகள் அனுமதிக்கூடாது என்று கேட்டுக் கொள்வதாக கூறினார்.

இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், எழுத்துப்பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, எழுத்துப்பூர்வமாக 6 மனுக்கள் பெறப்பட்டன. அத்துடன் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி

உதவி ஆணையாளர் (கலால்),
திருநெல்வேலி.

இணைப்புகள்:

1. வருகைப் பதிவேடு நகல் (மொத்தம் – 16 பக்கங்கள், 103 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
4. கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் – 6 எண்ணம்
5. கருத்து கேட்பு கூட்டம் குறித்து இவ்வலுவலகத்தில் எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் – 11 எண்ணம்